# கோலாலம்பூர் ஆற்றுத் திட்டத்தின் குளறுபடிகள்: ஆராயப்பட வேண்டும் -ஹென்றி லாய்

கோலாலம்பூர், ஜூலை 18-
கோலாலம்பூர் ஆற்றுத்திட்டமானது 2011 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட ஒன்றும் என்றும் சுற்றுலாத்துறையினை மேம்படுத்தக்கூடிய ஒரு முக்கியமான திட்டமாக இது கருதப்பட்டது என்று கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் ஆலோசனை வாரியத்தின் உறுப்பினர் ஹென்றி லாய் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தினால் பல கோடி வெள்ளி செலவும் திட்டமிட்டபடி திட்டம் நிறைவு காணவில்லை. நிதி தணிக்கை அறிக்கை திடுக்கிடும் தகவலை வெளியிட்டுள்ளது.

இதுவரையில் 3.915 பில்லியன் வெள்ளி இதில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

திட்டம் தாமதமாக அமலாக்கம் குறித்தும் நிதி விரயமாக்கப்படுவது குறித்தும் ஹென்றி லாய் ஆவேசம் கொண்டுள்ளார்.

இத்திட்டத்திற்காக செலவழிக்கப்படும் பெரும் தொகையானது மாநகரின் சுற்றுப்புற பகுதியினை மேம்படுத்தவும் மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்த பயன்படுத்தலாம்.

நமது அணுமுகுறையானது வரி செலுத்துவோர் மற்றும் சுற்றுலாக்காரர்களின் மத்தியில் ஒரு வித கேலிப் பொருளாக மாறிவிடக் கூடாது.



இத்திட்டம் சம்பந்தமான குளறுபடிகளை கண்டறிவதற்கு அரசாங்கம் கட்டாயம் ஒட்டுமொத்தமான விசாரணை மேற்கொள்ள வேண்டும். இத்திட்டம் கூடிய விரைவில் மேற் கொள்ளப்படுவதை உறுதிப்படுத்த அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வெறும் வார்த்தை ஜாலம் மற்றும் சுவரொட்டி விளம்பரம் வேண்டவே வேண்டாம் என்றும் ஹென்றி லாய் வலியுறுத்தினார்.

ஆகப் பெரிய திட்டங் களை நன்கு நிர்வகிப்பதற்கு நமக்கு தேவைப்படுவது திறமையான வெளிப்படைத்தன்மையான மற்றும் பொறுப்பான அரசு தேவை என்று ஹென்றி லாய் உறுதிப்பட தெரிவித்தார்.